41. பகலெல்லாம்

நேரிசை வெண்பா

பகலெல்லா முள்ளிநெடும் பள்ளிகொளுஞ் செவ்வி
அகலமறந் தாலின்னு மந்தோ – புகல்வேறே
ஏதுநினை விட்டானா னெப்படியா ளாயிடுவேன்
வேதமுரு காநீ விளம்பு.

பகல்எல்லாம் உள்ளி நெடும் பள்ளி கொளும் செவ்வி
அகல மறந்தால் இன்னும் அந்தோ - புகல் வேறே
ஏது நினைவிட்டால் நான் எப்படி ஆளாயிடுவேன்
வேத முருகா நீ விளம்பு.

உன்னைப் பகல் முழுவதும் நினைத்துப் பின்இரவில் நீண்ட உறக்கம் கொள்ளும்போது, நினது நினைப்பு நீங்க உன்னை மறந்தால், ஐயோ இன்னும் உன்னைவிட்டால் புகலிடம் வேறு ஏது? எப்படி உனக்கு அடிமையாவேன்? வேதங்களின் தலைவனான முருகவேளே! நீ கூறுவாயாக! 1

பாடுவே னின்னைப் படிப்பேனுன் மார்க்கமுறை
சூடுவே னின்னடியென் றொங்கன் முடி – நாடிச்
சருவதா காலமுஞ் சண்முககா வென்பேன்
இருதயா னந்தமளி யே.

---

2. "தொங்கன்முடி" இச்சீரை, நேர்நேர் நிரையென அலகிட்டுத் தேமாங்கனியெனக் கோடலொழிந்து – க – மு இரண்டிற்கும் இடையிலுள்ள னகரவொற்றை நீக்கி, நேர் நிரை நேரென அலகிட்டுக் கூவிளங்காயெனக் கோடல் வேண்டும். என்னை? வெண்பாவிற் கனிச்சீர் வரலாமென்னும் ஒத்தில்லாமையால். இவ்வாறிடைநிற்கும் ஒற்றொழித்து வெண்சீராகக் கொள வேண்டுமெனு நியாயத்திற்காக அடியார்க்கெளியனெனத் தொடங்குமொரு வெண்பாவில் தனிச்சீர் "படியின்மிசை" எனநிற்க ஸ்ரீமந் நடராஜப் பெருமானருளியனதையு முணர்வதோடு "சொல்லாரும் வல்லின மெல்லின மோடிடைத் தோன்றுமொற்று – நில்லாது நேர்நிரை நேராய் முடியுநிரம்பிய நூல் – கல்லாத மாந்தர்க டேமாங் கனியென்பர் கற்றுணர்ந்த – நல்லார்கள் யாவருங் கூவிளங் காயென நாட்டுவரே" என்ற விதியையுமுணர்க. **யாப்பருங்கலக் காரிகைக்** கட்டளைக்கலித்துறைகளி னடிகளி னீற்றில் "வானத்துமே" "நிகரில்வெள்ளை" எனக் கனிச்சீர்போலும் பூச்சீர்போலுங் காணப்படுபவைகளையும், வேறு நூல்களில் இவ்வாறு காணப்படுபவைகளையும் இவ்விதியாற் காய்ச்சீரெனவே யெழுத்தளவு பொருந்தக் கோடன் மரபு. இந்நூலுள் இவ்வொரு செய்யுட்கண்மாத்திரம் "தொங்கன்முடி" என ஆசிரியர் வருவித்த கருத்து வெண்பாவிலும் இப்படி யொருவிதி ஏகதேச மங்கீகரிக்கப்படுமென்பதைப் பிறர்க்கு விளக்கும்பொருட்டேயாம். மேலைவிதி கட்டளைக் கலித்துறைகட்குப் பெரும்பாலு மங்கீகாரமாம்.

பாடுவேன் நின்னைப் படிப்பேன் உன் மார்க்க முறை
சூடுவேன் நின்அடி என் தொங்கல் முடி - நாடிச்
சருவதா காலமும் சண்முககா என்பேன்
இருதய ஆனந்தம் அளியே.

உன்னைப் புகழ்ந்து பாடுவேன்; உன்னை அடைதற்கு வகுத்த நெறிமுறையைப் படித்தறிவேன்; உன் திருவடியை என் மாலையணிந்த தலையில் சூடிக்கொள்வேன்; உன்னை எக்காலமும் நாடிச் சண்முகா என்று கூறுவேன்! என் இருதயத்தில் இன்பமளியே. 2

கொன்றுதின் றேன்சிலநாட் கொல்லாதுண் டேன்சிலநாள்
இன்றுவிட் டேனினிமே லில்லையே – மன்றிலுறை
ஆட்டுக்கா லோன்முருக னானகுக ஞானவழி
காட்டித்தா ழாமலெனைக் கா.

கொன்று தின்றேன் சில நாள் கொல்லாது உண்டேன் சில நாள்
இன்று விட்டேன் இனிமேல் இல்லையே - மன்றில் உறை
ஆட்டுக்காலோன் முருகன் ஆன குக ஞானவழி
காட்டித் தாழாமல் எனைக்கா.

நான் சில நாட்கள் உயிர்களைக் கொன்று தின்றேன்; சில நாட்கள் கொல்லாமல் தின்றேன்; இன்று கொல்வதையும் உண்பதையும் விட்டுவிட்டேன். இனிமேல் இப்பாவச் செயல் இல்லை. பொன்னம்பலத்தில் எழுந்தருளியுள்ள நடனம் செய்திருவடியுடையோனாகிய நடராசனின் முருகன் ஆன குகனே! எனக்கு ஞான வழியைக் காட்டித் தாழ்வுறாமல் எனைக் காத்தருள்வாயாக. 3

சும்மா கிடந்தவெனைத் தூண்டிவிட் டூனுண்ணுஞ்
செம்மாரின் னாய்திரிதுர்ச் சீலம்போ – லிம்மகியின்
மம்மரார் வத்துழல வைத்ததெதற் காவமரர்
பெம்மானே யெம்மானே பேசு.

சும்மா கிடந்த எனைத் தூண்டிவிட்டு ஊன் உண்ணும்
செம்மாரில் நாய் திரி துர்ச் சீலம் போல் - இம்மகியின்
மம்மர் ஆர்வத்து உழல வைத்தது எதற்கா அமரர்
பெம்மானே எம்மானே பேசு.

சும்மா இருந்த என்னைத் தூண்டிவிட்டு, மாமிசம் உண்ணும் களிப்பு மிகுந்த நாய் திரிகின்ற கெட்ட குணத்தைப் போல், இப்பூமியில் அறியாமை மயக்கத்தில் உழல வைத்தது எதற்காக? தேவர்களின் பெருமானே! எம்மானே கூறுவாயாக! 4

முருகனருள் கொண்டுள்ளார் மூர்க்கரயர் துன்பிற்
கொருபோது மஞ்சியுற வாகா – ரெரிமீது
குப்பைசினந் தாலழிவு கொண்டிடுமல் லானெஞ்சே
நட்பாவ துண்டோ நவில்.

முருகன் அருள் கொண்டுஉள்ளார் மூர்க்கர் அயர் துன்பிற்கு
ஒருபோதும் அஞ்சி உறவு ஆகார் - எரிமீது
குப்பை சினந்தால் அழிவு கொண்டிடும் அல்லால் நெஞ்சே
நட்புஆவது உண்டோ நவில்.

முருகனின் அருளைப் பெற்றுள்ளவர்கள் மூர்க்கர் செய்யும் துன்பத்திற்கு ஒருபோதும் அஞ்சி அவருடன் உறவு கொள்ளார்; நெருப்பின் மீது குப்பை கோபித்தால் அழிவு கொண்டிடும்! அல்லால் மனமே அதனுடன் நட்புக் கொள்வதுண்டோ கூறுவாயாக! 5

சொன்னாற் பிறப்பொழியுஞ் சூராய கூற்றகலும்
எந்நாளும் பேரின்ப மெய்துநெஞ்சே – முன்னாள்
பொருசூரன் வல்லுடம்பு போழ்ந்தவயி லேந்து
முருகவே ளென்னு மொழி.

சொன்னால் பிறப்பு ஒழியும் சூர் ஆய கூற்று அகலும்
எந்நாளும் பேரின்பம் எய்து நெஞ்சே - முன் நாள்
பொரு சூரன் வல் உடம்பு போழ்ந்த அயில் ஏந்து
முருகவேள் என்னும் மொழி.

மனமே! முன்னாளிலே போர் செய்த சூரனுடைய வலிமையான உடம்பைப் பிளந்த வேற்படையை ஏந்தும் முருகவேள் என்னும் சொல்லைச் சொன்னால், பிறப்பு ஒழிந்து போகும்! துன்பமாகிய இயமன் நீங்குவான்! எக்காலத்தும் பேரின்பம் வந்து கூடும்! 6

பொல்லாத நெஞ்சே புரந்தருளும் வேலவற்கு
நல்லானா நின்றுண்மை நாடாது – வல்லாண்மை
பண்ணியுல கோரவாம் பாழ்த்தநெறி செல்வாயேல்
மண்ணாவாய் சொன்னேன் மதி.

பொல்லாத நெஞ்சே புரந்துஅருளும் வேலவற்கு
நல்லானா நின்று உண்மை நாடாது - வல்ஆண்மை
பண்ணி உலகோர் அவாம் பாழ்த்த நெறி செல்வாயேல்
மண் ஆவாய் சொன்னேன் மதி.

பொல்லாத மனமே! காத்தருளும் வேலவனுக்கு நல்லவனாய் இருந்து, உண்மைப் பொருளைத் தேடாது வலிய வீரம் காட்டி, உலகத்தார் விரும்பும் கோரமான பாழான வழியில் செல்வாயேல், நீ மண்ணாகப் போவாய்! சொன்னேன்; மதித்து நடந்து கொள்வாயாக! 7

வாரா விடும்பைபல வந்தே குவிந்தாலும்
ஓராறு துண்டனரு ளுண்டன்றோ – சீர்ாவாய்
துஞ்சாதே யெஞ்சாதே தொய்யாதே நையாதே
அஞ்சாதே நெஞ்சே யறி.

வாரா இடும்பை பல வந்தே குவிந்தாலும்
ஓர் ஆறு துண்டன் அருள் உண்டு அன்றோ - சீர் ஆவாய்
துஞ்சாதே எஞ்சாதே தொய்யாதே நையாதே
அஞ்சாதே நெஞ்சே அறி.

வரக்கூடாத துன்பங்கள் பல வந்து குவிந்தாலும், அவற்றைப் போக்க ஆறுமுகப்பெருமான் திருவருள் உண்டல்லவா! சிறப்படைவாய்! உறங்காது, குறையாது தொய்வடையாது, நைந்து போகாது, அஞ்சாது இருக்கலாம் என்று மனமே அறிவாயாக! 8

வீட்டின்மேன் மாட்டின்மேல் வேற்கண் மடந்தையர்மேல்
நாட்டின்மே லேசிந்தை நாட்டுகிற – பூட்டைநெஞ்சே
இவ்வளவு நன்குனக்கிங் கீந்தகும ரன்சரணை
எவ்வளவு மெண்ணாத தென்.

9. **பூட்டை** = காராம்பி. செக்கென்றுங் கூறுப.

வீட்டில் மேல் மாட்டின் மேல் வேற்கண் மடந்தையர்மேல்
நாட்டின் மேலே சிந்தை நாட்டுகிற - பூட்டை நெஞ்சே
இவ்வளவு நன்கு உனக்கு இங்கு ஈந்தகுமரன் சரணை
எவ்வளவும் எண்ணாதது என்.

வீட்டின்மீதும், செல்வத்தின்மீதும், வேல்போன்ற கண்களுடைய மாதர்மீதும், நாட்டின்மீதும், மனத்தைச் செலுத்துகின்ற செக்குப் போன்ற மனமே! இவ்வளவு நன்மைகள் இங்கு உனக்கு அளித்த குமரன் திருவடியை எந்த அளவும் நினைக்காதது ஏன்? 9

எண்ணாத வெண்ணமெலா மெண்ணியுழல் பேய்மனமே
விண்ணாடர் பேணுமயில் வேலவனை – யுண்ணாடிப்
பார்க்கவிரு ளாயுளசு பாவமல மாய்த்தொன்றாச்
சேர்க்கவரு வானதனைச் செய்.

எண்ணாத எண்ணம் எலாம் எண்ணி உழல் பேய் மனமே
விண் நாடார் பேணும் அயில் வேலவனை - உள் நாடிப்
பார்க்க இருளாய் உள சுபாவமலம் மாய்த்து ஒன்றாச்
சேர்க்க வருவான் அதனைச் செய்.

நினைக்காத நினைப்பெல்லாம் நினைத்து வருந்தும் பேய்போன்ற மனமே! தேவலோகத்தார் போற்றும் மயில் வாகனமுடைய வேலவனை, மனத்தில் நாடிப் பார்க்க இருளாக உள்ள தன்மையுடைய ஆணவ மலத்தை மாய்த்துத் தன்னுடன் ஒன்றாகச் சேர்க்க வருவான் சேயோன். 10

இக்கா சினியெங்கு மேகும் பணப்பறவை
எக்காலுந் துக்கமே யீயுமென்று – பொக்கநெஞ்சே
கானமயில் வீரனடி கண்டுபெரும் பேறுபெற
நீநினையா தேநினைந்து நில்.

இக்காசினி எங்கும் ஏகும் பணப்பறவை
எக்காலும் துக்கமே ஈயும் என்று - பொக்க நெஞ்சே
கானமயில் வீரன் அடி கண்டு பெரும் பேறு பெற
நீ நினையாதே நினைந்து நில்.

பொய் மனமே! இவ்வுலகம் எங்கும் செல்லும் பணப்பறவை எக்காலத்திலும் துக்கத்தையே தரும் என்று, சோலை மயில்வாகன

முடைய வீரனான கந்தவேளின் திருவடியைக்கொண்டு, பெரிய பேற்றைப் பெற நீ நினையாமல் நினைந்திருப்பாயாக. 11

நல்லார் நிஜநெறிக்கு நாட்டுப் பொருட்டொல்லை
இல்லா திருப்ப தேயியைபு – பொல்லாப்
பொருள்வந்தூ டாடிடுமேற் பொக்கமற்ற தெய்வ
அருள்வந்தூ டாடலரி தாம்.

நல்லார் நிஜநெறிக்கு நாட்டுப் பொருள் தொல்லை
இல்லாது இருப்பதே இயைபு - பொல்லாப்
பொருள்வந்து ஊடுஆடிடுமேல் பொக்கம் அற்ற தெய்வ
அருள் வந்து ஊடுஆடல் அரிது ஆம்.

இறைவனை வழிபடும் அறிஞர் உண்மை நெறிக்கு உலகப் பொருள் துன்பம் இல்லாதிருப்பதே பொருத்தம். பொல்லாத பொருள் வந்து சேருமேல், பொய்யற்ற தெய்வ அருள் வந்து சேருதல் அரிதாகும். 12

என்றைக்கு மில்லாநொவ் வென்னவினை யாலேயோ
இன்றைக்கு நாமெய்த விங்குற்ற – தொன்றுக்கும்
அஞ்சாதே நந்தே வருட்குமர வேள்காவல்
நெஞ்சே யிருக்கு நிதம்.

என்றைக்கும் இல்லா நொவ் என்ன வினையாலேயோ
இன்றைக்கு நாம் எய்த இங்குற்றது - ஒன்றுக்கும்
அஞ்சாதே நம் தேவு அருள் குமரவேள் காவல்
நெஞ்சே இருக்கு நிதம்.

எக்காலத்திலும் இல்லாத துன்பம் நாம் செய்த எந்த வினையினாலோ இக்காலத்தில் நாம் அடையுமாறு உண்டாயிற்று மனமே! நீ ஒன்றுக்கும் அஞ்சாதே! நமது கடவுளான அருள் குமரவேளின் காப்பு நாள்தோறும் நமக்கு இருக்கின்றது. 13

ஆணும்பெண் ணுங்கூடி யாடறரி னின்னமுதம்
காணுமதை யுட்கொள்ளிற் கற்பமன்றோ – மாணுடையோர்
கொள்வாருய்த் தோர்ந்தே கொளார்க்குநல னிவ்வுலகின்
உள்ளேது நெஞ்சே யுணர்.

ஆணும் பெண்ணும் கூடி ஆடல் தரின் இன் அமுதம்
காணும் அதை உட் கொள்ளின் கற்பம் அன்றோ - மாண் உடையோர்
கொள்வார் உய்த்து ஓர்ந்தே கொளார்க்கு நலன் இவ் உலகின்
உள் ஏது நெஞ்சே உணர்.

பிங்கலை என்னும் சூரிய நாடியான ஆணும், கலை என்னும் சந்திர நாடியான பெண்ணும், கூடிக்குலவிச் செய்தால் (பிராணாயாமம் செய்தால்) அதன் விளைவாக இன்சுவை அமுதம் தோன்றும்; அதைப் பருகினால் காயகற்பமாக உடம்பு நிலைத்திருக்கும்; மாட்சியுடையோர் இச்செயலை மேற்கொள்வர். இதனை அறிந்து செய்யாதார்க்கு, இவ்வுலகில் உள்ள நன்மைகள் வேறு ஏது? உணர்வாயாக. 14

வரிசைவழா வோரேழு வண்ணவர ணஞ்சூழ்
அரியநிலை யென்பவைகட் கப்பா—லிருமைப்
பகலிரவில் லாவோர் பரவெளிக்கண் ணேசேய்
திகழுமா னெஞ்சே தெரி.

வரிசை வழா ஓர் ஏழு வண்ண அரணம் சூழ்
அரிய நிலை என்பவைகட்கு அப்பால் - இருமைப்
பகல் இரவு இல்லா ஓர் பரவெளிக்கண்ணே சேய்
திகழும் ஆல் நெஞ்சே தெரி.

மனமே! வரிசை தவறாத ஓர் ஏழுவண்ணம் எனும் மாயையாகிய மறைக்கும் மதில் உள்ள அரிய நிலை என்பவைகட்கு அப்பால், பகலும் இரவும் என்னும் இரண்டும் இல்லாத பரவெளியிடத்துச் சேயோன் விளங்குவனென்று அறிவாயாக. 15

முன்செய்து பின்னஞ்சு மூடமன மேநீதான்
என்சொல்லை நன்குமதி யிஞ்ஞாலத்—துன்பினிடைப்
போகாதெம் மான்றாள் பொருந்தவென் றாலுணர்வு
சாகாம னின்றங்கே சா.

முன் செய்து பின் அஞ்சு மூடமனமே நீ தான்
என் சொல்லை நன்குமதி இஞ்ஞாலத் - துன்பின் இடைப்
போகாது எம்மான் தாள் பொருந்த என்றால் உணர்வு
சாகாமல் நின்று அங்கே சா.

15. அரணம் = மதில்

முன்னே ஒன்றைச் செய்து விட்டு அதற்காகப் பின்னே அஞ்சும் மூட மனமே! நீ என் வார்த்தையை நன்கு மதித்து நடப்பாயாக. இவ்வுலகத்தின் துன்பத்திடைப் போகாமல் எம் கடவுளான கந்தவேளின் திருவடியைச் சேர வேண்டுமானால், உன் உணர்வு ஒழியாமல் நின்று அத்திருவடியில் ஒடுக்கு. 16

சிரங்குனிப் பான்விண்டு தெண்டனிடு வான்மால்
கரங்குவிப் பான்றலையிற் கஞ்சன் – குரங்கித்
துதிபடித் தாள்வேலோய் சூர்தபவென் பார்க்குக்
கதியளிப் பான்பதங் கண்டு.

சிரம் குனிப்பான் விண்டு தெண்டன் இடுவான் மால்
கரம் குவிப்பான் தலையில் கஞ்சன் - குரங்கித்
துதிபடித்து ஆள்வேலோய் சூர்தப என்பார்க்குக்
கதியளிப்பான் பதம் கண்டு.

திருவடி கண்டு விஷ்ணு தலையால் வணங்குவான்; இந்திரன் நிலத்தில் வீழ்ந்து வணங்குவான்; பிரமதேவன் தலைமேல் கைகூப்பித் தொழுவான்; தாழ்ந்து உன் புகழ்பாடி எம் அச்சம் ஒழிய எம்மை அடிமை கொள் வேலோய் என்று வேண்டுவோர்க்கு அவன் அன்பை உணர்ந்து நல்ல கதியளிப்பான். 17

மண்சுமந்த கோன்முருகா மண்சுமந்த மான்மருகா
மண்புரந்த மால்குரவா மாயஞ்செய் – மண்பிளந்த
வேலிறைவா நூலிறைவா வீடருளென் பார்களவன்
காலடைவார் மாலடையார் கள்.

மண் சுமந்த கோன் முருகா மண்சுமந்த மால் மருகா
மண்புரந்த மால் குரவா மாயம் செய் - மண் பிளந்த
வேல் இறைவா நூல் இறைவா வீடு அருள் என்பார்கள் அவன்
கால் அடைவார் மால் அடையார்கள்.

17. குரங்கி = தாழ்ந்து

18. மண்சுமந்தகோன் = சோமசுந்தர பிரான். மண்சுமந்த மால் = ஓரசுரன் கடலில் வைத்துள்ள பூமியை வராக வடிவெடுத்துச் சுமந்துகொணர்ந்த விட்டுணுமூர்த்தி. மண்புரந்தமால் = பூமி புரந்த தசரதராம மால். மண் = பூமியாகலின் தரணி யெனவுங் கூறப்படும். "தலமு மலையுந் தபனனுந் தரணி" எனப் **பி – நிகண்டு** கூறுதலின் அம்மண், மலையெனும் பொருள் பயக்கும். அம்மலை கிரௌஞ்சகிரி யெனப்படும்.

வைகை நதிக்கரைக்கு ஒரு கூலியாளாய் வந்து கூடையில் மண்ணைச் சுமந்த சோமசுந்தரக் கடவுளின் புதல்வனான முருகப் பெருமானே! இரணியாசுரன் பூமியைச் சுருட்டிக் கடலில் ஒளித்து வைத்தபோது, வராகமாகி அவனைக் கொன்று பூமியைக் கொண்டுவந்து ஆதிசேடன் தலைமேல் விரித்த திருமாலின் மருமகனே! பூமியையே அரசனாய் இருந்து காத்த தசரத மகாராஜன் புதல்வனான இராமபிரானின் குருவே! பலவித மாயங்கள் செய்த கிரௌஞ்சமலையை வேலாற் பிளந்த வேலிறைவா! வேத நூலை அளித்த இறைவா! எங்கட்கு வீடு பேற்றை அருள்வாய் என வேண்டுவோர் பிறவி மயக்கம் அடையார்; உன் திருவடியை அடைவார்கள். 18

சங்கரிசேர் பொன்மேனிச் சங்கரியின் மாமருமான்
சங்கரியி னோர்மருமான் சங்கரியைச் சங்கரிக்குஞ்
சாமிக்கு மோர்குரவன் சாமிக்கோர் சூழிறைவன்
நாமெச்சி நாடயிலி னான்.

சங்கரி சேர் பொன்மேனி சங்கரியின் மாமருமான்
சங்கரியின் ஓர் மருமான் சங்கரியைச் சங்கரிக்கும்
சாமிக்கும் ஓர் குரவன் சாமிக்கு ஓர் சூழ் இறைவன்
நாம் மெச்சி நாடு அயிலினான்.

நாம் புகழ்ந்து கூறி நாடும் வேலிறைவன், சங்குபோலும் வெள்ளொளி சேர்ந்த பொன்மேனியுடைய சங்கரியின் சிறந்த மகன் ஆவன்; சங்கைத் திருக்கையில் தூக்கிய திருமாலின் மருமகன் ஆவன்; இந்தச் சங்குடைய திருமாலைக் கொல்லும் சாமியான சிவபெருமானுக்கு ஓர் குரு ஆவன்; ஏனைய கடவுளர்க்குத் தலைவன் ஆவன்! 19

கோத்தயிர்வெண் ணெய்த்திருடன் கோலமரு காநறிய
பூத்திருடன் றன்மதலாய் பொங்குகுறக் – கோத்திரத்தோர்
பெண்டிருடிச் சென்ற பெருந்திருடா வென்போத
முண்டுதிரு டத்தெரியா யோ.

---

19. சங்கரிசேர் என்னுந் தொடரிலுள்ள அரி = ஒளி. "மருமான்" எனுஞ் சொற்கள் இரண்டில் முன்னையது மகன்; பின்னையது மருமகன்.

கோத்தயிர் வெண்ணெய்த் திருடன் கோலமருகா நறிய
பூத்திருடன் தன்மதலாய் பொங்குகுறக் - கோத்திரத்தோர்
பெண்திருடிச் சென்ற பெரும் திருடா என் போதம்
உண்டு திருடத் தெரியா யோ.

பசுவின் தயிர், வெண்ணெய் ஆகியவற்றைத் திருடி உண்ணும் திருடனின் (கண்ணன்) மருமகனே! மணமுள்ள தாமரைப் பூவைத் திருடிய திருடன் (சிவன்) மகனே! கோபித்து எழுகின்ற குறவர் (நம்பிராசன்) கோத்திரத்தில் ஒருவருக்கும் தெரியாமல் நள்ளிரவில் ஒரு கன்னிப் பெண்ணைத் (வள்ளி) திருடிச் சென்ற பெரிய திருடனே! (முருகன்) என் அகங்காரமும் உண்டு அதனைத் திருட உனக்குத் தெரியாதா? 20

இந்த 20ம் செய்யுளை ஒரு காகிதத்துண்டி லெழுதித் தழுவணை யடியில் வைத்துவிட்டு ஆசிரியர் படுத்திருந்தார். அஞ்ஞான்று கைகொண்டு மெத்தென அடிக்கும் ஓரடி தமது முதுகில் வீழ்ந்ததை யுணர்ந்து "இறைவ! எளியேன் பாடிய பாட்டு, திருவுளத்திற்குச் சம்மதமில்லையென வுணர்த்துமாறு இதன்மேலு மறிவிக்கப்படுமாயின் அதனைப் பரிகரித்துவிடக் கடவேன்" எனச் சிந்தித்துப் படுத்துக்கொண்டனர். அவ்வித அறிவிப்பொன்றும் ஏற்படவில்லை. நிகழ்ந்த தலம் பிரப்பை. பெண் திருட்டு எக்காரணத் தெழுந்த தென்பதை ஸ்ரீமத் - குமாரசுவாமியத்துச் செழுஞ்சோலைத் திருவிளையாடலி லறியலாம்.

காலில்லா தான்மதலாய் கையில்லா தானிளையோய்
தோலில்லா மால்குருவே சூர்கீண்ட – வேலுள்ளோய்
கண்ணில்லாள் காதலனே காதில்லா ரீசுரவென்
னுண்ணில்லா தென்கொ லுரை.

கால் இல்லாதான் மதலாய் கைஇல்லாதான் இளையோய்
தோல் இல்லா மால் குருவே சூர் கீண்ட - வேல் உள்ளோய்
கண் இல்லாள் காதலனே காதுஇல்லார் ஈசுர என்
உள் நில்லாது என் கொல் உரை.

காலம் கடந்த சிவபெருமானின் மகனே! சிறுமையில்லாத விநாயகரின் தம்பியே! தோல்வியில்லாத இராமபிரானின் குருவே! சூரனைப் பிளந்த வேற் படையுடையவனே! பெருமையில்லாத வள்ளிக் குறத்தியின் கணவனே! குற்றமில்லாதவரின் கடவுளே! என் உள்ளத்தில் எழுந்தருளாமற் போனது ஏன்? கூறுவாயாக. 21

அன்னைக் கரைவலியப் பற்குத் தலைவலியோர்
கொன்னறு மாதுலற்குக் கூனற்கை – மன்னெஞ்சுக்
குத்துடைய வண்ணனுக்குக் கோட்டுவாய் பேச்சில்லா
முத்திதந் தாள்சண் முகன்.

அன்னைக்கு அரைவலி அப்பற்குத் தலைவலி ஓர்
கொன் அறு மாதுலற்குக் கூனல்கை - மன் நெஞ்சுக்
குத்துடைய அண்ணனுக்குக் கோட்டுவாய் பேச்சுஇல்லா
முத்தி தந்து ஆள் சண்முகன்.

பேச்சில்லாத முத்தியைத் தந்து அடிமைகொள்ளும் சண்முகனின் அன்னைக்கு இடுப்பு வலி; அப்பனுக்குத் தலைவலி; மாமனுக்கு வளைந்தகை; அண்ணனுக்கு கோணல் வாயும் நெஞ்சுவலியும்! சிவபெருமானின் திருமேனியில் பாதியில் அன்னை இருப்பதால் அவர் வலியில் பாதி அன்னைக்கு! சிவபெருமான் தலையில் கங்கையைச் சுமப்பதால் தலைவலி. மாமன் ஆன திருமால் சங்கு ஊதுவதால் வளைந்த கை! கமலாசுரன் விநாயகரின் நெஞ்சில் தண்டத்தால் அடித்ததால் நெஞ்சுக் குத்துடையவன்! தந்தம் உடைய வாய் ஆகையால் கோட்டு வாயுடையவன்! இவ்வாறு சிலேடையமைத்துள்ளார் சுவாமிகள். தாய் தந்தை, மாமன் ஆகிய எல்லோரும் நோயாளிகளும் ஊனமுற்றோருமாகக் காட்சியளிக்கின்றனர். சண்முகனோ பேச்சில்லாத முத்தியைத் தருபவன் ஆதலால் அவனும் ஓர் ஊமை போலும்! 22

கீழுதடு மேலுதடுங் கிட்டித் துவரன்ன
கீழுதடு மேலெயிறுங் கிட்டியந்தக் – கீழுதடும்
மேலுதடு மேசேர்ந்து மேற்குத்தொன் றேற்றுவருந்
தோலறவொள் வேலற் றுதி.

---

22. கூனற்கை என்பதிற் கூன் = சங்கு. சங்கு கோணலாயிருத்தலின் இப்பெயரும் சுரிமுகம் வளையென்னும் பெயர்களுங் கொண்டன. "கூனும் வளைவுங்கோண லென்ப" என்பது **பி – நிகண்டு.** கூத்து "குத்து" எனக் குறுகிற்று. நெஞ்சுக்கூத்து = இதய நடனம்.

23. இச்செய்யுளைப் பொருள்படுத்துங்கால் "பவம்" என்னும் ஒரு மொழி வெளிப்படும் அஃதற "ஒள்வேலற்றுதி" என்றறிவுறுத்தா ரென்க.

கீழ் உதடு மேல் உதடும் கிட்டித் துவர் அன்ன
கீழ் உதடு மேல் எயிறும் கிட்டி அந்தக் - கீழுதடும்
மேல் உதடுமே சேர்ந்து மேல் குத்து ஒன்று ஏற்று வரும்
தோல் அற ஒள் வேலன் துதி.

கீழுள்ள உதடும் மேலுள்ள உதடும் ஒட்டவும், பவளமன்ன கீழுதடும் மேல்வரிசைப் பல்லும் ஒட்டவும், அந்தக் கீழுதடும் மேலுதடும் சேர்ந்து, ஒரு புள்ளியோடு வரும் சொல் அற்றுப் போகும்படி ஒளி பொருந்திய வேலவனைத் துதிப்பாயாக! மேற்கண்டவாறு உச்சரிக்கப்படும் சொல் "பவம்" என்பதாகும். இச்சொல் அற வேலனைத் துதிக்க வேண்டும் என்று பாடல் கூறுவதால், பவம் அற வேலனைத் துதிக்க வேண்டும் என்பது பொருள். பவம் என்பதற்குப் பிறப்பு என்று பொருள். அதனால் பிறப்பு அறுவதற்கு வேலனைத் துதியுங்கள் என்றார் சுவாமிகள். 23

பசுவே றரன்சுதனைப் பக்குவந்தா னுள்ள
பசுவைவதைத் துண்ணும் பரனைப் – பசுவெல்லாங்
காப்பவனைக் கந்தரலங் காரஞ்சொன் னோனிறையை
நீப்பின்றி நெஞ்சே நினை.

பசு ஏறு அரன் சுதனைப் பக்குவம் தான் உள்ள
பசுவை வதைத்து உண்ணும் பரனைப் - பசு எல்லாம்
காப்பவனைக் கந்தர்அலங்காரம் சொன்னோன் இறையை
நீப்பு இன்றி நெஞ்சே நினை.

எருது வாகனத்தில் ஏறும் சிவபெருமானின் புதல்வனை, பக்குவப்பட்ட உயிரின் துன்பத்தை அனுபவிக்கச் செய்து தன்னுடன் ஐக்கியப்படுத்தும் கடவுளை, உயிர்கள் எல்லாவற்றையும் காப்பவனைக் கந்தரலங்காரம் பாடியருளிய அருணகிரிநாதரின் இறைவனை, நீக்கமின்றி நெஞ்சே நினைப்பாயாக!

இப்பிரபந்தத்துள் 6, 17, 22 ஆஞ் செய்யுள்கள் **பூட்டுவிற் பொருள்கோள்** நடைய.